கேள்வியில் சொல்லப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படும்பொழுது அங்கே கட்டப் படவிருக்கிற அந்தத் திட்டத்திற்குப் பாதகம் ஏதுவும் இருக்குமா? அப்படி பாதகம் எதுவும் இல்லாமல் அதைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

Surplus water from Kallanai Canal.

*168 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to utilise the surplus water of the Cauvery released from the Kallanai Canal in Thanjavur district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கல்லணைக் கால்வாயில் காவிரி ஆற்றின் உபரி நீர் செல்வதற்கு வழியில்லை. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, ஏராளமான தண்ணீர் வீணாகப் போவதன் காரணமாக நஷ்டம் ஏற்படுகிறதே அதுபற்றி பரிசிலனை செய்யப்பட்டதா? அதுபற்றி என்ன முடிவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கல்லணைக் கால்வாயில் நீர் வீணாகப் போவதில்லை. அதனுடைய கொள்ளளவிலே உள்ள தண்ணீரில் பாசனத்திற்குத் தேவையான தண்ணீர்தான் திறந்துவிடப்படுகிறது. தண்ணீர் வீணாகப் போகிறது என்ற கேள்வி எழவில்லை என்றுதான் சொன்னேன்.

பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத் திட்டம்

*வினு 169—திரு. மு. பழனிசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்தினை மேலும் விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர்களுக்கு எந்த பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இதுபற்றிய செயற்குறிப்பு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் தலைமைப் பொறியாளரின் தொடக்க நிலை ஆய்வில் உள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

1973 நவம்பர் 19]

திரு. மு. பழனிசாமி: தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்தை எல்லக்கோயில் வட்டத்திற்கு விஸ்தரிக்க வேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாகக் கேட்கப்பட்டு வருகிறது. அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகளை உடனடியாகச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் ஆயக்கட்டு நிலங்களை அதிகமாக்குவதற்கு ஆன செயற் குறிப்பு தலைமைப் பொறியாளரின் விரிவான ஆய்விலே இருக்கிறது என்று சொன்னேன். அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு போர்டு ஆப் ரெவின்யூவினுடைய ஆலோசனை கேட்கப்பட்டதற்குப் பிறகு அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. பழனிசாமி: தலைவர் அவர்களே. இந்த பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை குண்டடம் பகுதிக்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக்கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் குழுவொன்று தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்துவிட்டு ஐ.சி.ஏ.ஆர்.-க்கு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறது. அந்த அறிக்கையில் இந்த பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் பகுதிகளில் ஆண்டுக்கொரு முறை என்பதற்குப் பதிலாக ஆண்டுக்கு இரண்டு முறைகள் சாகுபடி செய்யக்கூடிய முறையில் 2 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் அதிகமாகப் பாசனம் செய்யலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதன்படி அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்பொழுது 2 லட்சத்து 45 ஆயிரம் ஏக்கர் பாசனம் செய்யப்படுகிறது. இதை 4 லட்சமாக ஆக்கலாமா என்பதைப்பற்றி பரிசீலனை நடந்து வருகிறது. பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. சு. துரைசாமி: அந்தத் திட்டத்திலே ஆனைமலை ஆறுத் திட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறதா? அப்படிச் சேர்க்கப்பட்டால் எவ்வளவு ஏக்கருக்கு தண்ணீர் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக்கேள்வி போட்டால் பதில் தரலாம்.